**Starting time 12.00 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 178/2004**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 30.11.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : தமிழரசி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u> இந்த வழக்கை எனது கணவரான முதல் வாதி ஆரம்பத்தில் 14 நபருக்கு எதிராக பாகப்பிரிவினை வேண்டி தாக்கல் செய்திருந்தார் என்றால், ஆமாம். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது எனது கணவர் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுகளாக நானும், எனது குழந்தைகளும் வாதிகளாக சேர்ந்து வழக்கு நடத்திவருகிறோம் என்றால், சரிதான். எனது கணவர் உயிருடன் இருந்தபோதே அவரை சாட்சியாக விசாரித்து பகுதியாக குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுவிட்டது என்றால், எனக்கு தெரியாது.

2. ஆத்தூர் அரசு மருத்துவமனையில் என் கணவருக்கு கொடுக்கப்பட்ட பிறப்பு சான்றிதழும் சென்னை வழக்கறிஞர் சங்கத்தில் எனது கணவர் பதிவு செய்யப்பட்ட சான்றிதழில் பதிவாகியிருந்த பிறப்பு தேதியும், முரணாக இருந்ததால் அவர் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார் என்றால், ஆமாம். தற்போது திருத்தப்பட்ட பிராத்தின் படி 17 நபருக்கு எதிராக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால், ஆமாம். என்னுடைய கணவரின் வழக்கின்படி அவரின் தகப்பனார் பெயர் சீனன் என்கிற அருணாச்சலகவுண்டர் என்பதுதான் அவரது பெயர் என்றால், ஆமாம்.

3. நாகியம்பட்டி கிராமத்தில் வசிக்கும் கந்தசாமி பண்டாரம் மகன் நடேசன், அவரது மற்றொரு மகன்கள் நடராஜன், மகள்களான செல்லம், சிவமாலை ஆகிய நாலு பேரும் இறந்துவிட்டதால், ஒரு மகன் மட்டும் உயிருடன் இருக்கிறார். யார் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. அதேபோல வழக்கின் 15-வது பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால், ஆமாம். இன்றைய தேதிவரையிலும் 11 முதல் 15 பிரதிவாதிகள் இறந்து சம்மந்தமாக மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால், நடவடிக்கை எடுத்துவிடுகிறோம்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 12.10 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி, பி.எஸ்.சி., எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**